## ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை நிறுவனம் - 2015

ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை நிறுவனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிபுக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டுக்களின் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் 30 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவு பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம்தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபரிவுகள் கணக்காய்வின் நோக்கெலலையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 09 இன் 09 ஆம் பிரிவின் பிரகாரம் சேவை வழங்குகையில் பாவிக்கும் அல்லது பகிர்ந்தளிப்பதற்காக, பொருட்கள் அல்லது வழங்கும் தன்மையில் உள்ளவைகள் இருப்பாக இனங்காணப்பட வேண்டிய போதும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தில் எஞ்சியிருந்த பெறுமதி ரூபா 470,607 ஆன 80 மாதிரி ஒன்றுதிரட்டும் தொகுதிகள் இருப்பாக இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவினத்தின் கீழ் இனங்காணப்பட வேண்டிய ரூபா 29,999 தொகை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டமையால் நிலையான சொத்துக்கள் அப் பெறுமானத்தினால் மற்றும் பெறுமானத்தேய்வு ரூபா 6,750 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு ஆரம்பமாவதற்கு 03 மாதங்களுக்கு முன் நிறுவனத்தின் பாதீடு பணிப்பாளர் சபை மூலம் அங்கிகரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் பாதீடு தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 95,000 மிகையொன்றாக இருந்தபோதிலும் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 110,540 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா.15,540 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

## 3.2 நிறுவனத்திற்கு எதிராக உள்ள சட்டரீதியான சம்பவங்கள்

உலக தடை ஊக்கமருந்து தடுப்பு முகவராண்மை நிறுவனம் இந்த முகவராண்மை நிறுவனத்தின் ஒழுக்காற்று தீர்மானங்கள் இரண்டிற்கு எதிராக 9,606 சுவிட்சர்லாந்து பிரென்க் (ஊர்கு) நட்ட ஈடு கோரி நிறுவனத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. மேலும், இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டுக்களின் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் ஐஐ ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் நோக்கங்கள் பின்வருமாறு ஆகும்.

(i) விளையாட்டுக்களின் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டை ஒழிப்பதற்க்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

(ii) விளையாட்டுக்களுடன் தொடர்புபட்ட ஊக்கமருந்து பயன்பாடு தொடர்பான துறைகள் மற்றும் உரிய ஆராய்ச்சி உட்பட முகவரான்மை நிறுவனத்திற்கு சமமான செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஏனைய சர்வதேச அமைப்புகளுடன் பரஸ்பர ரீதியில் பரிசோதனை செயற்பாடுகளை ஊக்குவித்தல்.

மேற்குரிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பாக கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டுக்களின் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் விதிகளை உருவாக்கி அவற்றை வர்த்தமானியில் பிரசுரித்ததன் பின்னர் அப் பரிசோதனை மேற்கொள்ளல், தண்டனை வழங்குதல் மற்றும் ஏனைய தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ் விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு நிறுவனம் இது வரை நடவடிக்கை எடுத்து இருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி பிரிவு ஒன்றை ஆரம்பிப்பதற்கும் உள்நாட்டு வைத்திய முறையில் பயன்படுத்தப்படும் மருந்துகளின் உள்ளடக்கம் மற்றும் அவற்றில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை அறிந்துக்கொள்ளும் பரிசோதனைகளில் ஈடுபடுவதற்கும் திட்டமிடப்பட்டு இருந்த போதிலும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(இ) ஊக்கமருந்து ஆராய்ச்சி கட்டுப்பாட்டு அதிகாரிகளையும் விளையாட்டு பொறுப்பாளர்களையும் சர்வதேச ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்களின் பிரகாரம் பயிற்றுவிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை அச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

--------------------------------------------------

கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை நிறுவனத்தின் 2015 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 05 மாத காலதாமதத்தின் பின்னர் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

-----------------------------------------

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பெறுகைகள் திட்டம்

-------------------------------

2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------

ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை நிறுவனத்தின் ஒட்டுமொத்த பாதிடப்பட்ட நிதியேற்பாடுகளில் மீளாய்வாண்டின் போது 36 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் பாதீடு செய்யப்பட்ட 23 தலைப்புக்களில் 11 இல் 80 சதவீதத்திற்கும் அதிகமான சேமிப்பும் 05 தலைப்புக்களில் 100 சதவீத நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது மேலும், 04 செலவின விடயங்களின் நிதியேற்பாட்டினை விஞ்சி செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.